# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2017 - 2018

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:.............................................................. நேரம்: 120 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழரின் தாயகங்கள் ____________________ .

   (ஈழமும் மலேசியாவும், ஈழமும் தமிழகமும், தமிழகமும் சிங்கப்பூரும்)

2. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் நூல்

   ____________________.

   ( மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள் )

3. 300 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்

   ____________________.

   ( முன்னூறு, முந்நூறு, முன்நூறு )

4. பழமொழி : முயற்சி உடையார் ____________________ அடையார்.

   ( இகழ்ச்சி, புகழ்ச்சி, உயர்ச்சி )

5. சேரன்செங்குட்டுவன்____________________ச் சிலை வடித்தான்.

   ( கோவலனுக்கு, மாதவிக்கு, கண்ணகிக்கு )

6. நான் இப்பொழுது போகிறேன். நீ____________________வருவாய்?

   ( இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது )

7. கூலங்களில் ஒன்று ____________________ .

   ( வடை, பயறு, கொழுக்கட்டை )

8. எங்களுக்குப் பொங்கல் விழாவைப் போல் ஐரோப்பியருக்கு

_________________.

( அறுவடைவிழா, கலைவிழா, இசைவிழா )

9. நாவரசி _________________ எனச் சிரித்தாள்.

( சலசல, கலகல, மளமள )

10. போர்முரசை _________________ என்றும் அழைப்பர்.

( மணமுரசு, கொடைமுரசு, படைமுரசு )

11. கோலாட்டம் ஆடுவோரின் இரு கைகளிலும்

_________________ இருக்கும்.

( பந்துகள், கோல்கள், செம்புகள்)

12. சிங்கம் முயலைப் பார்த்து_________________ .

( பிளிறியது, கத்தியது, முழங்கியது )

13. நாலடியாரில் கரையில்லாதது எனக் குறிப்பிடப்படுவது

_________________ .

( அகவை, வாழ்நாள், கல்வி )

14. மிகப்பழங் காலந்தொட்டு தமிழ் மக்களிடையே வழக்கில்

இருந்து வந்த இசைக்கருவி_________________ .

( குழல், யாழ், வீணை )

15. சிறுவனின் கையெழுத்து_________________ உள்ளது.

( படிப்படியாக, திரள்திரளாக, மணிமணியாக )

16. **நொடி :**

அடிமேல் அடிபட்டும் அயராத சின்னப் பையன்

குறிவைத்த இடம் பார்த்துத் தப்பாமல் சேருவான் அவன்

__________________ .

( அஞ்சல், நிழல், மிதியுந்து )

17. __________________ மக்களுக்கு அம்மானை,வில்லுப்பாட்டு, கூத்துப் போன்ற இசைவடிவங்களில் கதை கூறுவர்.

( வீரர்கள், கலைஞர்கள், உழவர்கள்)

18. எமக்குத் தேவையான __________________ க் கற்க வேண்டும்.

( நூல்களை, நூல்களால், நூல்களுக்கு )

19. அறுவடை என்பது __________________ .

( குவித்தல், கதிர் அறுத்தல், கட்டுதல் )

20. யாழிசைப்போர் __________________ என அழைக்கப்பட்டனர்.

( பாணர், விறலியர், கூத்தர் )

21. அவை எல்லாம் நல்ல பழங்களே. __________________ உனக்குத் தேவையானதை மட்டும் எடு.

( இவற்றுள், அவற்றுள், ஒவ்வொன்றும் )

22 பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெறும் இசைக்கருவி

__________________ .

( தண்ணுமை, மேளம், முரசு )

23. கனகனையும் விசயனையும் சிறைப்பிடித்த மன்னன்

_________________.

( எல்லாளன், சேரன்செங்குட்டுவன், சங்கிலியன் )

24. கங்காரு _________________ குட்டியை வயிற்றுப் பையில்

காவிச் செல்லும்.

( உனது, தனது, எனது )

25. கற்கக் கற்கப் பெருகுவது _________________ .

( நீர், அறிவு, பணம் )

26. தமிழுக்குரிய சிறப்பெழுத்து _________________ .

( ல, ள, ழ )

27. குயிலி பாட்டுப் _________________ .

( மீட்டுவாள், வாசிப்பாள், பாடுவாள் )

28. வாழ்க்கை வழிகாட்டி எனக் கூறும் நூல் _________________ .

( ஆத்திசூடி, நல்வழி, திருக்குறள் )

29. நான் நேற்று வீட்டிலிருந்து பாடம் _________________ .

( படிப்பேன், படிக்கிறேன், படித்தேன் )

30. **ஒலிவட்டு :**

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்ட பிரிங்கர்

_________________ நாட்டைச் சேர்ந்தவர் .

( ஒல்லாந்து, இத்தாலி, யேர்மனி )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| மேடும் பள்ளமுமாக | பார்க்கப்பார்க்க | இன்பதுன்பம் |
| கல்விகேள்விகளில் | மெல்லமெல்ல | |

1. ______________________ இரண்டும் வாழ்வில் வருவது இயல்பு.

2. தூயவன் ______________________ சிறந்து விளங்கினான்.

3. காட்டில் மாறன் சென்ற பாதை______________________ இருந்தது.

4. குருவிக் குஞ்சு______________________ப் பறக்கத் தொடங்கியது.

5. பூக்களைப் ______________________ ஆசையாக இருக்கும்.

புள்ளிகள் 05

3) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. சின்னத்தம்பிப் புலவரால் பாடல் ____________________ .

2. மரங்களால் எமக்குப் பல நன்மைகள் ____________________ .

3. நாம் ஒற்றுமையாகச் சேர்ந்து வேலையைச் ____________________ .

4. நேற்று மழை விடாது ____________________ .

5. அம்மா ஆடிப்பிறப்பன்று கொழுக்கட்டை ____________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

விலங்குகள், பறவைகள், சிற்றுயிரிகள் என்பன தங்களிடம் சில நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளன. உணவைக் கண்டால் தன் உறவுகளை அழைத்து உண்ணும் காகத்திடம் ஒற்றுமையைக் காணலாம். எந்நேரமும் ஓய்வில்லாமல் தங்கள் உணவுகளைத் தேடும் எறும்பு, தேனீ என்பவற்றில் சுறுசுறுப்பையும் சேமிக்கும் பண்பையும் காணலாம். தன்னை வளர்த்தவர்களைக் கடைசி வரையும் மறக்காத நாயிடம் நன்றி என்ற சிறந்த குணத்தைக் காணலாம். தனக்குப் பெரிய மீன் கிடைக்கும்வரை காத்திருக்கும் கொக்கிடம் பொறுமையைக் காணலாம். எனவே, இவற்றிடம் இருந்து நாங்கள் நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்வோம்.

1. எதனிடம் ஒற்றுமையைக் காணலாம்?

   ______________________________________________ .

2. சுறுசுறுப்பும் சேமிக்கும் பண்பும் கொண்ட சிற்றுயிரிகள் எவை?

   ______________________________________________ .

3. தன்னை வளர்த்தவர்களைக் கடைசிவரையும் மறக்காத விலங்கு எது?

   ______________________________________________ .

4. கொக்கிடம் நாம் எதைக் காணலாம்?

   ______________________________________________ .

5. இங்கு குறிப்பிட்டுள்ள பறவை ஒன்றின் பெயரைத் தருக.

   ______________________________________________ .

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| அன்பும் | பிள்ளைகள் | குறிக்கோளாக |
|---|---|---|
| வாழ்விற்கும் | குடும்பம் | |

நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது______________.

ஒரு குடும்பத்தில் பெற்றோர், ______________ ,மூத்தோர் ஆகியோர் உள்ளனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியையே தமது ______________ க் கொண்டவர்கள். பெற்றோரிடம் இருந்து ______________ அரவணைப்பும் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன. ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒரு கையில் உள்ள விரல்களைப்போல ஒத்திசைய வேண்டும். நல்ல குடும்பமே நல்ல பிள்ளைகளை உருவாக்கும். உலகின் அமைதிக்கும் ______________ நல்ல குடும்பங்களே இன்றியமையாதவை.

புள்ளிகள் 10

6) **பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. முக்கனிகளும் முழுப்பயன் தருகின்ற காலம் எது?

________________________________________

2. நரம்புக் கருவிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

________________________________________

3. முதலெழுத்துகள் எத்தனை?

________________________________________

4. இலக்கண நூல்களில் முதன்மையான நூல் எது?

________________________________________

5. சொற்பொருள் தருக.

இடுக்கண் :- ____________________

உடுக்கை :- ____________________

புள்ளிகள் 10

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நடந்து | காய்ச்சி | அழிக்க |
| சிறந்த | மறக்க | |

1. தமிழ் மிகச் ________________ அறநூல்களைக் கொண்ட மொழியாகும்.

2. நாம் எமது தாயகத்தை என்றும் ________________ க் கூடாது.

3. ஆடிக்கூழ் ________________ க் கூடியிருந்து குடிப்போம்.

4. முயல் சிங்கத்தை ________________ த் திட்டம் போட்டது.

5. நான் நேற்றுப் பள்ளிக்கு ________________ சென்றேன்.

புள்ளிகள் 05

## 8) கீழே உள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. பட்டம் :- ________________

2. கடல் :- ________________

3. சிற்றுந்து :- ________________

4. திராட்சை :- ________________

5. முக்கோணம் :- ________________

புள்ளிகள் 05

9) **தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.**



ஒரு நாள் இலக்கியனும் இலக்கியாவும் பள்ளிக்குச் செல்லும் வழியில்.....

புள்ளிகள் 15